Literacy for a Billion

Movie: Jathi Malli
Year: 1993

Song: Azhai thale varuvala
Lyricist: Vairamuthu

அழைத்தால் வருவாளே
ஸ்ரீ ரஞ்சனி
அழைத்தால் வருவாளே
ஸ்ரீ ரஞ்சனி
ஆனந்தராகம்
அவளின் சந்நிதி
இதயம் துளைத்து
இசை குழைத்து
அழைத்தால் வருவாளே
ஸ்ரீ ரஞ்சனி

கீரவாணியுடனே
சாரமதியும்
மோகனமும் அறிவேன்
எனக்குள்ள ராகம்
ஸ்ரீ ரஞ்சனி
கண்கள் தூங்கும் பொழுதும்
நினைவு தவறி
கனவு வரும்பொழுதும்
உதடுகள் பாடும்
ஸ்ரீ ரஞ்சனி
நிலவை மூட
திரைகளில்லை
நினைவை மூட
கதவு இல்லை
ஸ்வரமெனும் அருள் தர வா
வா என்று

அழைத்தால் வருவாளே
ஸ்ரீ ரஞ்சனி

தவறல்லவா அட
நீங்கள் பாடியது
சிவரஞ்சனி
பஞ்சமம் இல்லாதது
உங்கள்
நெஞ்சுக்குள் நில்லாதது

இதுவல்லவோ
ஸ்ரீ ரஞ்சனி
எனக்கா தெரியாது
ஸ்ரீ ரஞ்சனி
கொஞ்சம்
கலப்படம் செய்தேன்
சிவரஞ்சனி
கோபம் தீர இந்த
குழப்பம் உதவியது
புத்தி தெளிய இந்த
உத்தி உதவியது
கள்ள சாவி போட்டபோதும்
கதவு திறந்து நிலவு நடந்து
வெளி வந்தது
எனக்கா தெரியாது
ஸ்ரீ ரஞ்சனி

*Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.*

*PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.*